Registered as a Newspaper


# உதயன்

சுடர் : 37 | கதிர் : 273 | வெள்ளிக்கிழமை 26 ஒகஸ்ட் 2022 | ஆவணி 10 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"திரைகடலோடியும் திரவியம் தேடினது அந்தக்காலம், திரைகடலோடியும் டொலரை அனுப்பு என்டுறது இந்தக்காலம்"



# இனிமேல் சைபர் போர்; எதிர்கொள்ளத் தயாராகுக!

பாதுகாப்பு பல்கலை விழாவில் ஜனாதிபதி ரணில் அறைகூவல்

**கொழும்பு, ஒகஸ்ட் 26**

எதிர்காலத்தில் தரை, வான், கடல் மாத்திரமன்றி சைபர் (இணைய) தளத்திலும் போர் நிகழலாம். எனவே எமது வீரர்கள் அவ்வாறான தொழில்நுட்ப போருக்குத் தேவையான அறிவைப் பெற்றிருக்க வேண்டுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 11

அதானி குழுமத்துக்கு வழங்கப்படவுள்ள

## காற்றாலை திட்டத்துக்கு எதிர்ப்பு

மன்னாரில் மீண்டும் போராட்டம்

விரிவு - பக். 09

## இன்னும் ஒரு வாரத்தினுள் நாட்டில் இருப்பார் கோத்தா

அவரின் உறவினர் உதயங்க நேற்று மீண்டும் தகவல்

கொழும்பு, ஒக. 26

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அடுத்த மாதம் 3 ஆம் திகதி நாடு திரும்புவார் என்று ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் 11

## 4 மில்லியன் டொலருக்கு மருத்துவப் பொருள்கள்

வழங்குகின்றது உலக சுகாதார நிறுவனம்

கொழும்பு, ஒக. 26

இலங்கைமக்களின்அவசர சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 4 மில்லியன் அமெரிக்க டொலர் பெறு 11

நீதித்துறையிடம்

## மன்னிப்புக் கோரினார் ரஞ்சன் ராமநாயக்க

இன்று அல்லது திங்கள் அவர் விடுதலை

கொழும்பு, ஒக. 26

நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, நீதித் 11

## குழந்தைகளைப் பயன்படுத்தி நல்லூரில் ஊதுபத்தி விற்பனை

5 பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக. 26

யாழ்ப்பாணம் மாநகர் மற்றும் நல்லூர் ஆலய சூழலில் ஊதுபத்தி வியாபாரம் செய்த 3 பெண்கள், ஆண் 11

## அனைவருக்கும் நலம் நல்க நல்லூரானை வணங்குவோம்

வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஒக. 26

இலங்கையின் நெருக்கடிகளை வெற்றிகொள்ள அனைவரும் ஒன்றிணைந்து கடினமாக உழைக்க வேண்டிய தருணம் இது. இந்த நெருக்கடியான சூழலை வெற்றி கொண்டு, அனைவருக்கும்நலம்நல்கநல்லூர்க் கந்தனைப் பிரார்த்திப் போம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நல்லூர்ப் பெருந்திருவிழாவை 10

வெளிநாடு செல்லும் அரச பணியாளர்கள்

## டொலரை நாட்டுக்கு அனுப்ப வேண்டும்!

கொழும்பு, ஒக. 26

சம்பளமில்லாத விடுமுறையில் வெளிநாடுகளுக்குச் செல்லும் அரச பணியாளர்கள் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தொகை டொலரை 11

நல்லூரரான் தேர் உற்சவத்தில்

## திருடர்கள் கைவரிசை 30 பவுண் நகை அபேஸ்

நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் கையும் மெய்யுமாக பிடிபட்டார்

யாழ்ப்பாணம், ஒக. 26

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர் உற்சவமான நேற்று மாத்திரம் 30 பவுண் நகை திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் மேற்கொள்ளப் 11

## டீசல், பெற்றோல் விநியோகம் நிறுத்தம்

கொழும்பு, ஒக. 26

முத்துராஜவல முனையத்தில் இருந்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள்மற்றும்தொழிற்சாலைகளுக்கான டீசல் பெற்றோல் விநியோகம் தற்போது முற்றாக நிறுத்தப்பட் 11



## 'அரோகரா' கோஷம் விண்ணதிர அலங்காரக் கந்தன் தேரில் வலம்

யாழ்ப்பாணம், ஒக. 26

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிக அத்தியாவசியமான
# 91 மருந்துகளின் கையிருப்பு காலி



### மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஓக.26**
**மிக அத்தியாவசியமான 91 மருந்துப் பொருள்களின் கையிருப்பு முற்றாகத் தீர்ந்துபோகும் ஆபத்து உருவாகியுள்ளது என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

நாட்டின் மத்திய மருந்துக் களஞ்சியத்தில் கடந்த வாரம் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது என்றும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழுவின் அறிக்கை மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது. மயக்க மருந்து, புற்று நோய் மருந்துகள், சுவாசப் பாதிப்பு நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள் பொதுவான இருதய நோய்களுக்கான மருந்துகள், வலி நிவாரணிகள் என்பன முற்றாக தீர்ந்துபோகும் நிலை உருவாகியிருக்கின்றது.

இந்த நிலைமை உருவாகும்வரை இது தொடர்பாக பொறுப்பான அதிகாரிகள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பது அறிக்கை ஊடாகத் தெரியவந்துள்ளது.

மீதமுள்ள மருந்துகளின் கையிருப்பு போதுமானதாக இல்லை. அதனால் நோயாளர்களுக்கு ஒரு மாதத்துக்குப் போதுமான மருந்துகளை மருத்துவர்களால் வழங்க முடியவில்லை. ஒரு வாரத்துக்கான மருந்துகளையே வழங்குகின்றனர். இந்த நிலைமையால் நோயாளிகள் மீண்டும் மருத்துவர்களை நாடவேண்டியுள்ளது -என்றார். (எ-இ)

## விற்பதற்கு வழியில்லாமல் தேங்கியுள்ளது பெற்றோல்

### கூடுதல் இருப்பை உறுதிசெய்த எரிபொருள் நிலையத்தினர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 26

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு, கூடுதல் பெற்றோல் இருப்பை உறுதிசெய்த போதிலும், பெற்றோல் விற்பனை செய்யப்படாமல் தேங்கியுள்ளது என்று எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

கியூ.ஆர். முறை நடைமுறைக்கு வந்த பின்னர், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் தேக்கமடைய ஆரம்பித்திருந்தது. எனினும், நல்லூர் பெருந்திருவிழாக் காலத்தில் எரிபொருள் தேவை மக்களுக்கு ஏற்படும் என்பதால், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கூடுதலான எரிபொருளை இறக்குமதி செய்து இருப்பை உறுதிப்படுத்திய போதிலும், பெற்றோலின் விற்பனையில் வீழ்ச்சியே ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-17)

## எரிபொருள் நிலையங்களுக்கு இவ்வாரம் மண்ணெண்ணெய்!

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ்ப்பாணக் குடாநாட்டில், தெரிவுசெய்யப்பட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அடுத்த ஒருசில நாள்களுக்குள் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில், மீனவர்களுக்காக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுவந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட இதர எரிபொருள் நிலையங்களுக்கும் அடுத்த ஒருசில நாள்களுக்குள் மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இவ்வாறு விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய் மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## உழவியந்திர சக்கரம் ஏறி ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஓக.26

உழவு இயந்திரப் பெட்டியின் சக்கரம் ஏறியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி, மீசாலையில் நடந்துள்ளது.

உழவு இயந்திரப் பெட்டிக்குக் கீழ் தந்தை படுத்திருந்தமை தெரியாது மகன் உழவியந்திரந்தை இயக்கியபோது சக்கரம் தந்தையின் இடுப்புப் பகுதியில் ஏறியது என்று கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-9)



## தமிழர்களின் உரிமைகளை வலியுறுத்திப் போராட்டம்!

### மன்னாரில் நேற்று முன்னெடுப்பு

மன்னார், ஓக. 26

தமிழர்களின் அரசியல் உரிமைகளையும், கௌரவமான அரசியல் தீர்வையும் வலியுறுத்தி, வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மன்னாரில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

குறித்த அமைப்பால் முன்னெடுக்கப்பட்டுள்ள 100 நாள்கள் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகவே, செயற்றிட்டத்தின் 25ஆவது நாளை முன்னிட்டு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, சட்டத்தரணி சர்மிலன் டயஸ் மற்றும் கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் என்பனவற்றின் பிரதிநிதிகளும், மனித உரிமை ஆர்வலர்களும் கலந்துகொண்டார்கள். (ம-213)



## பண்டாரவன்னியனின் போர் வெற்றிநாள் நேற்று!

### வவுனியாவில் கடைப்பிடிப்பு

பண்டாரவன்னியனின் 219 ஆவது போர் வெற்றிநாள் வவுனியாவில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை மற்றும் பண்டாரவன்னியன் விழாக்குழுவின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் தலைமையில் வவுனியா மாவட்ட செயலக முன்றிலில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் நினைவுத்தூபிக்கு முன்பு நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் மற்றும் நகரசபை உறுப்பினர்கள், பொது அமைப்பினர், அரச அதிகாரிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிலைக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர். (ச-110-246)

## பண்டாரவன்னியனுக்கு வவுனியாவில் சதுக்கம்

வவுனியாவில் பண்டாரவன்னியனுக்கு நேற்றுச் சதுக்கம் திறக்கப்பட்டது.

பண்டாரவன்னியனின் 219ஆவது போர் வெற்றிநாள் வவுனியா மாவட்ட செயலகத்தின் முன்பாக நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.




அதனைத் தொடர்ந்து வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாகவுள்ள பண்டாரவன்னியன் சிலை அமைந்துள்ள சந்திப்பகுதியை 'பண்டாரவன்னியன் சதுக்கம்' என நகர சபை தலைவர் இ.கௌதமன் அறிவித்தார். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 'பகிடிவதையற்ற பல்கலைக்கழகம்' கனவுதானா?

**யா**ழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அண்மைக்காலமாக மீண்டும் ஊடகங்களில் பேசுபொருளாகியிருக்கிறது. ஆனால், காலிமுகத்திடல் போராட்டங்களுக்கெல்லாம் முன்னோடியான பொங்குதமிழ் போன்ற மக்கள் எழுச்சிகளை நடத்தி, தமிழினத்தின் உரிமைக்கான அடையாளமாகவும், வழிகாட்டியாகவும் விளங்கிய யாழ்.பல்கலைக்கழகத்தின் மாண்புக்கு மாசுகற்பிக்கும் வகையிலேயே இப்போது அங்கு நடக்கும் சம்பவங்களை நோக்கவேண்டியுள்ளது

பதவிக்காக தற்கொலை முயற்சி, மாணவன் அல்லது மாணவி தற்கொலை முயற்சி, பகிடிவதை , வகுப்புத்தடை என பல்கலைக்கழகத்தில் இருந்து தொடர்ச்சியாக வெளிவரும் செய்திகள் ஆரோக்கியமானவை அல்ல. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அண்மைக்காலமாகப் பகிடிவதைக் குற்றச்சாட்டுக்களால் வகுப்புத் தடை விதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை எதிர்காலச் சந்ததி பற்றிய அச்சத்தையே ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில், 21 மாணவர்கள் வரையில், பகிடிவதைக் குற்றச்சாட்டில், வகுப்புத் தடைக்கு உள்ளாகியிருக்கின்றனர். முன்னரும் இதுபோன்ற பகிடிவதைக்குற்றங்களுக்காக மாணவர்களுக்கு வகுப்புத்தடை உள்ளிட்ட கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டிருந்தன. அப்படித் தண்டனை வழங்கப்பட்டபோதும் பகிடிவதை குறைவதாயில்லை. மாறாக முன்னரை விடவும் இப்போது பகிடிவதைக் குற்றங்கள் அதிகரித்துள்ளன என்றே தோன்றுகின்றது.

ஒருவரைக் கொடுமைப்படுத்தி அதனூடாக மகிழ்ச்சியடதல் என்ற 'சாடிஸ' மனநிலை மிகவும் ஆபத்தானது. அவ்வாறான மனப்பாங்கு மாணவர்களிடம் – ஓர் இனத்தின் எதிர்காலத் தூண்களிடம் – தென்படுவதை சாதாரண விடயமாகக் கடந்துவிட முடியாது. அதுவும் தங்கள் உரிமைக்காக நீண்ட போராட்டத்தை நடத்திவரும் ஓர் இனத்தின் எதிர்காலச் சந்ததியிடம் இவ்வாறான மனநிலை காணப்படுவது, எம் விடுதலைக்கான எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கும் என்பதில் ஐயமில்லை.

1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கல்வி நிறுவனங்களின் பகிடிவதையையும் வேறு வகையான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டத்தின் படி, பகிடிவதையில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டுகள் வரையில் சிறைத்தண்டனை விதிக்க முடியும். பகிடிவதையால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் இந்தச் சட்டத்தில் உள்ளன. இவ்வாறான கடும் சட்டங்களும், ஒழுக்க நடவடிக்கைகளும் இருக்கும்போதும் பகிடிவதையைத் தடுக்க முடியாதுள்ளமைக்கு என்ன காரணம்?

பகிடிவதைக் குற்றச்சாட்டில் நிரூபிக்கப்படுவோருக்கு அதியுச்சத் தண்டனையாக இப்போது யாழ்.பல்கலைக்கழகத்தில், வகுப்புத் தடை மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. அப்படியிருந்தும் பகிடிவதை தொடர்கின்றதென்றால், தண்டனையின் வீரியம் போதாது என்பதே அர்த்தமாகின்றது. சட்ட ஏற்பாடுகளின்படி, 10 ஆண்டுகள் வரையில் பகிடிவதைக் குற்றத்துக்காக சிறைத்தண்டனை வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தும், குற்றத்தில் ஈடுபட்ட மாணவர்களின் எதிர்காலத்தைக் கருதியே பல்கலைக்கழக நிர்வாகம் அந்தளவு உச்சபட்ச தண்டனைகள் குறித்து ஆராய்வதில்லை. ஆனால் இந்த அனுதாபத்தை பகிடிவதைக் குற்றங்களில் ஈடுபடுவோர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். 'பகிடிவதை செய்தால் மிஞ்சிப்போனால் வகுப்புத்தடை தானே விதிப்பார்கள்' என்ற அவர்களின் நம்பிக்கைதான், தொடர்ந்தும் அவர்களுக்கு பகிடிவதையில் ஈடுபடும் துணிவைக் கொடுக்கின்றது. அத்தோடு பகிடிவதைக் குற்றத்தில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டு, அவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டால், சக மாணவர்களை ஒன்றுதிரட்டி எதிர்ப்புப் போராட்டங்களில் இறங்கிவிடுகிறார்கள். இந்த எதிர்ப்பைச் சமாளிக்க, பல்கலைக்கழக நிர்வாகமும் கீழிறங்கிவந்து, வகுப்புத்தடையை இல்லாதாக்குதல் அல்லது தடைக்காலத்தைக் குறைத்தல் என்று தண்டனையைக் கேலிக்கூத்தாக்கி விடுகின்றது. இதுவும், பகிடிவதைகள் தொடர்வதற்கான இன்னொரு காரணியே.

புதுமுக மாணவர்களுடன் அறிமுகமாதல் என்ற போர்வையில் நடத்தப்படும் பகிடிவதைக் கொடூரம் தேவையற்ற ஒன்று. பகிடிவதை காரணமாக ஆண்டுதோறும் சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து விலகுகின்றனர் என்று தரவுகள் சொல்கின்றன. பல ஆண்டுகளாக அந்த மாணவர்கள் கட்டியெழுப்பிய கனவுகள், பகிடிவதையால் கணநேரத்தில் காணாமல் ஆக்கப்பட்டுவிடுகின்றன. பகிடிவதையைக் கட்டுப்படுத்த – நிறுத்த – மிகவும் இறுக்கமான நடவடிக்கைகள் அவசியம். மறுபுறுத்தில் பாடசாலை மட்டங்களில் இருந்தே மாணவர்கள் மத்தியில் பகிடிவதைக்கு எதிரான மனநிலையை உருவாக்க வேண்டியதும் அவசியம். 'பகிடிவதையற்ற பல்கலைக்கழகமே' அனைவரினதும் எதிர்பார்ப்பும் கனவும்.

நாளொரு நல்வார்த்தை

"பெரிய வெற்றிவேண்டும் என்றால், நீங்கள் சில நேரங்களில் பெரிய அபாயங்களை எதிர் கொள்ளத் துணியவேண்டும்"

- பில்கேட்ஸ்




# பயங்கரவாதத் தடைச் சட்டம் முறையற்ற வகையில் அமுல்!

## ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 26

**முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை மலினப்படுத்தும் வகையில் தற்போதைய அரசாங்கம் செயற்படுகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரணில் அரசு முறையற்ற வகையில் பயன்படுத்துகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை முழுமையாகச் செயற்படுத்தவேண்டும் - இவ்வாறு முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கி, தேசிய பாதுகாப்பு நிமித்தம் நடைமுறைக்குப் பொருத்தமான சட்டம் உருவாக்கப்படும்வரை பயங்கரவாதத் தடைச்சட்டம் எதற்காகவும் பயன்படுத்தப்பட மாட்டாது என்று சர்வதேசத்துக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது. அதை தற்போதைய அரசாங்கம் மலினப்படுத்துகின்றது. நாட்டில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் மதிக்கப்பட்டால் மாத்திரமே பொருளாதார மீட்சிக்காக சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை ஜனாதிபதி உட்பட அரசாங்கம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் 6 உயர்மட்ட கண்காணிப்பாளர்கள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளார்கள். தற்போதைய மனித உரிமைகள் மீறல் செயற்பாடுகள் மற்றும் ஜனநாயகத்துக்கு எதிரான அடக்குமுறைகள் மத்திய வங்கி ஆளுநரின் பொருளாதார மீட்சிக்கான முயற்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் - என்றார். (எ-இ)

# ஊடகங்களும் நீதித்துறையும் விளையாட்டுக்கானவையல்ல

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சீற்றம்

அரசாங்கத்தின் அமைச்சர்கள் ஜனநாயகத்தின் பெயரால் ஊடகங்களையும் நீதித்துறையையும் விளையாட்டாகக் கருதுகின்றனர். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதித்துறையைக் கடுமையாக அவமதிக்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஒரு சட்டமும், அரசாங்கத்தில் உள்ள சிலருக்கு வேறு சட்டமும் நடைமுறைப்புடுத்தப்படுகின்றன. நீதித்துறை மற்றும் ஊடகங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் இந்த அவமதிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் - என்றார். (ம)

நாளை 27.08.2022 சனிக்கிழமை ஆவணி 11

சுபநேரம் : 03.05 - 04.35
ராகுகாலம்: 09.05 - 10.35

நல்லூர் கந்தசுவாமி பூங்காவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளுடைய விடுதலை கண்துடைப்பா?

## தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான சட்டத்தரணி கே.வி.தவராசா கேள்வி

யாழ்ப்பாணம், ஓக. 26

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் முன்பின் முரண்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றது. ஆதலால், அரசியல் கைதிகளின் விடுதலை என்றவாறாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை, அரசியல் கைதிகளின் விடுதலையாக அல்லாமல் சிறுகுற்றங்களைப் புரிந்தவர்களின் விடுதலையாக அமையப்போகின்றதோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது என்று கேள்வியெழுப்பியுள்ளார் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

46 அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்களென நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தன்னிடம் தெரிவித்ததாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் ஊடகங்களுக்கு அண்மையில் தெரிவித்திருந்த நிலையில், தற்பொழுது 'தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடனும் தன்னுடனும் பேச்சு நடத்தியுள்ளனர் அவர்களின் நியாயமான கோரிக்கை தொடர்பில் பரிசீலித்து வருகின்றோம். அதற்கமைய அரசியல் கைதிகளின் விடுதலையில் முதல் கட்டமாக குறிப்பிட்ட சில அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும்' என அதே நீதி அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சரின் இந்த மாறுபட்ட கருத்தானது, தடுப்பிலும் சிறைகளிலும் உள்ள 46 அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் சமூக வலைத்தளமான முகநூல்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பான விருப்புக் கருத்துக்களை வெளியிட்டமைக்காக 2017ஆம், 2019ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் சில கைதிகளை விடுதலை செய்துவிட்டு கண்துடைப்பு நாடகத்தை அரங்கேற்ற அரசாங்கம் முயல்கின்றதா? என்ற கேள்விகளை எழுப்புகின்றது.

தற்பொழுது அரசியல் மாற்றம் காரணமாக அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தை, தமிழ்த் தேசிய அரசியலில் உள்ள தலைமைத்துவங்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் 46 அரசியல் கைதிகள் விடுதலையில் முக்கியமான கவனத்தைச் செலுத்தும் அதேவேளையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்தும் அடைத்தும் வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் கைதிகளையும் விடுவிப்பதில் அரசியல் இலாபங்களுக்கு அப்பால் செயற்படுவதையே எமது சமூகம் எதிர்பார்க்கின்றது -என்றுள்ளது. (ம)

## நல்லூர் பெருந்திருவிழா போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 26

நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டு கலைக்கூடலால் யாழ். கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள்.

**கனிஷ்ட பிரிவு மாணவர்கள்**

இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சங்கவி சசிகரன் (தரம்-6), சிறிதரன் அபிநயா (தரம்-6), கமலேஸ்வரன் ரிலக்ஷனா (தரம்-7), சிவநேசன் நஜிகா (தரம்-7), கபிலேந்திரன் பிரீத்தி (தரம்-6), குமணன் அபிஷ்கா (தரம்-6), செல்வநாயகம் சுவஸ்திகா (தரம்-7), செல்வகுமார் யஸ்மினி (தரம்-7), ஜெகன் ஷத்வியா (தரம்-6), கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அக்ஷயா அமிர்தலிங்கம் (தரம்-8), மத்திய கல்லூரியைச் சேர்ந்த குணேஸ்வரன் டெனிஸ் (தரம்-7), இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சத்தியா தமிழினி (தரம்-7), உதயகுமார் ஆதனா (தரம்-7), விஜயகுமார் ஹஜினிகா (தரம்-7)

**மத்திய பிரிவு மாணவர்கள்**

இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வகுமார் விதுஷனா (தரம்-11), அச்சுவேலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த இராசலிங்கம் டிலக்ஷிகா (தரம்-10), மதிவாணன் மயூரா (தரம்-10), வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த ஓவியா திருலிங்கநாதன் (தரம்-10), நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கந்தசாமி நிருஷா (தரம்-10), அச்சுவேலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த தர்மலிங்கம் ஜெனனிக்கா (தரம்-10), விஜயகுமார் பிரமிளா (தரம்-11), இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த அகிலன் அபிநயா (தரம்-11), வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த கௌசியா ஞானகுமார் (தரம்-9), வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த தரணிகா ஜெனார்த்தன் (தரம்-10), அச்சுவேலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த விஜயகுமார் வைஷ்ணவி (தரம்-9), அச்சுவேலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த குகதர்சன் பிரஸ்ணவி (தரம்-10), அச்சுவேலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த றதீஸ்வரன் றஷாஜினி (தரம்-11), இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கம்ஷாயினி ஜீவாகரன் (தரம்-10)

**மேற்பிரிவு மாணவர்கள்**

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த ஹர்ணி ஹரிவண்ணன் (தரம்-12), இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சந்திரசேகரம் மயூரியா (தரம்-13), அச்சுவேலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த சண்முகநாதன் பானுமதி (தரம்-12), இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சுஜீவன் அபிநயா (தரம்-12), இளங்கோ லாவண்யா (தரம் -13), வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த வைஷ்ணவி ஶ்ரீதயாளன் (தரம்-12), இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் சாயிறூபினி (தரம்-12), சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கிருத்திகா தேவராசா (தரம்-12), வைத்தீஸ்வரா கல்லூரியைச் சேர்ந்த சரணியா ஜெயக்குமார் (தரம்-13), இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சத்தியசுரேஸ் கஜானா (தரம்-12), சிறிகாந்தன் துஷிந்தா (தரம்-12), நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜெயக்குமார் வினுசா (தரம்-13), கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் ஜென்சிகா (தரம்-13) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அருள்மாறன் விசாகன் (தரம் -12)

இவர்களுக்கான பரிசில், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பூங்காவனத் திருவிழாவான நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும். பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெறும் மாணவர்கள் சைவ சமய ஆசார உடையுடன் பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டு கலைக்கூடல் கேட்டுக்கொண்டுள்ளது. (ஒ-5)



## நிரந்தர அரசியல் தீர்வுகோரி வவுனியாவில் கவனவீர்ப்பு

நீதிக்கான மக்கள் அமைப்பால் நெடுங்கேணி கந்தசாமி ஆலய முன்றிலில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நிரந்தர அரசியல் தீர்வை வலியுறுத்தி இடம்பெற்று வரும் நூறு நாள் செயற்றிட்டத்தில் 24ஆவது நாளாக இந்தப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது 'உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்' எனும் தொனிப்பொருளில் கவனவீர்ப்பு இடம்பெற்றது. இதில் பல்வேறு பகுதிகளிலுமிருந்து மக்கள் வருகை தந்து கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். (ச-110)

## வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் மக்கள் பார்வைக்கு

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து கடந்த 18 ஆம் திகதி யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு கிடைத்த வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்டச்செயலக இணையத்தளத்திலும் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 0212117116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்யுமாறு அறிவித்துள்ளனர். அதன்பின்னர் தங்கள் அலைபேசிக்கு அனுப்பப்படும் குறுந்தகவலுடன், புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், மாகாணங்களுக்கிடையே வாகன உரிமைமாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும், யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்துக்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவித்துள்ளனர். (எ-14)

## கோரிக்கைகள் நிறைவேறாவிடின் அரசாங்கத்துக்கு ஆதரவில்லை!

### செல்வம் எம்.பி. தெரிவிப்பு

எங்களது கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படாதுவிடின் நாம் ஒருபோதும் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு தரமாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றோம். இந்தப் பயங்கரவாதச் தடைச் சட்டத்தை வைத்துகொண்டு இளைஞர்களை கைது செய்வது தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துகின்ற செயற்பாட்டை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால், எங்களுடைய ஆதரவு ஒருபோதும் இருக்காது - என்றார். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


படங்கள்: சிவசாந்தன்



நல்லூர்க் கந்தனின் வருடாந்தத் தேர்த்திருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்று காலை இடம்பெற்றது.




















# மருதடி விநாயகர் ஆலய மஹா கணபதி ஹோமம்!

யாழ்ப்பாணம், ஓக. 26

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹா கணபதி ஹோமம் எதிர்வரும் 31ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி தினமான புதன்கிழமை, காலை 6.30 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு கர்மாரம்பம், கணபதிவந்தனம், புண்ணியாகவாசனம், அனுக்ஞை, கடஸ்தாபனம், கும்ப யாகசாலை பிரவேசம், யாகபூஜை, அக்கினி வழிபாடு நடைபெற்று மஹா கணபதி ஹோமம் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவ மூர்த்தி விநாயகருக்கு திரவிய அபிஷேகம் உள்ளிட்ட அபிஷேகங்கள் இடம்பெற்று கும்ப ஆராதனை நடைபெறும். அதனைத் தொடர்ந்து நவகலச கும்பாபிஷேகம் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு பூசை நிறைவடையும்.

அதன்பின்னர் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-14)





## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு ஆலய சூழலில் கலைநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 26

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலய சூழலில் விசேட கலை நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் மயிலூரான் அரங்கத்தில் இடம்பெற்றன.

வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சு.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத்துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் கலந்துகொண்டார்.

உரும்பிராய் ஸ்ரீசாயி கலைக்கழகம், அரியாலை பிருந்தாவனம் கலாமன்றம், வவுனியா நிருத்திய ஸ்ருதி நாட்டிய கலாலயம், யாழ். வண்ணை கலைமன்றம், இணுவையூர் குமரன் நர்த்தனாலயம், கரம்பொன் முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை, பொன்னாலை சந்திர பரத கலாலயம் உள்ளிட்ட மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்

ஆண்டுக்கு ஆண்டு அழுதழுது தீர்த்தாலும்
மீண்டெழுந்து வரமுடியா பெருந்துயர் இதுவன்றோ !
ஓராண்டு நினைவுகளில் கரைந்து துடிக்கின்றோம்.
தீராத வேதனையில் வெந்து தணிகின்றோம்.
வேரோடி நிற்குதப்பா உங்கள் அன்பு முகம்.
வாயாரப் போற்றி வழிபட்டு நிற்கின்றோம்.
ஆராதனை செய்து அழுது தொழுகின்றோம்.
ஆன்மா சாந்தி பெற அன்னை தாள் பணிகின்றோம்.

நயினையிலே பிறந்து, நாகம்மாள் அருளுடனே
நாகர் பேரரென வளர்ந்து, சிறந்து
கணபதியின் வளர்ப்பதனில் உயர்ந்து, நிமிர்ந்து
கண்மணியாள் அன்பதனில் கரைந்து, கனிந்து
பரமேஸ்வரியோடு இல்வாழ்வில் இணைந்து
பெறுதற்கரிய பிள்ளைகளைப் பெற்று
மருமக்கள் பேரர் எனப் பெரு வாழ்வு வாழ்ந்தவரே!
வானுலகில் வாழ்க வானுலகில் வாழ்க!

கந்தன் கருணையிலே கல்விதனைக் கற்று,
கல்விப் பணி தன்னில் கடமை பல ஆற்றிச்
சொல்விற்பனரெனச் சொல்லும் படிக்குக்
கவிதையிலும் உரையினிலும் பெயர் தன்னை நாட்டி,
நற் பணிகள் பல செய்த சிவராமலிங்கரே!
பல்லோரும் ஏற்றப் பணிந்து நிற்கின்றோம்.
ஓராண்டு நினைவுகளில் நனைந்து நின்று
ஆன்மா சாந்தி பெற வணங்கி நிற்கின்றோம்

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**"கலைமாமணி வாசா"**
**3 ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

**குடும்பத்தினர்**

(cs.20446) (2.6)

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை – காங்கேசன்துறை

### பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட வாகன ரயர்கள், பற்றறிகள், இரும்புகள், பழைய பத்திரிகைகள் மற்றும் ஏனைய பாவனைப்பொருட்கள், ஏல விற்பனை செய்யப்படவுள்ளன. இப்பொருட்களை அலுவலக நாட்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணிவரை பார்வையிடலாம்.

இடம் :- தலைமை அலுவலகம், வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

காலம் :- 09.09.2022 (வெள்ளிக்கிழமை)

நேரம் :- காலை 10.30

குறிப்பு :- ஏல விற்பனையில் பங்குபற்றும் ஏலதாரர்கள் மீளளிக்கக்கூடியதான பிணைப்பணம் ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும்.

**சோ.சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலி.வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**

26.08.2022

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் ஆறுமுகம் வரதராஜன்

தோற்றம் 17.09.1946 மறைவு 19.08.2020



**திதி: ஆவணி அமாவாசை**

அன்பின் திருவுருவே!
எட்டமுடியாத தொலைவில் நீ சென்றாய்
ஆண்டு இரண்டல்ல நூறாகலாம்
காலங்கள் மாறி விடைபெறலாம்
நெஞ்சினில் நிறைந்த நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
**மனைவி, மகள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்.**

**"இராஜ சக்தி"**
**வண்-வட.மேற்கு, ஆனைக்கோட்டை**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

**தோற்றம்** 25 • 05 • 1934



**மறைவு** 29 • 07 • 2022

கடந்த 29.07.2022 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் திருமதி சிவசிங்கம் புஷ்பகாந்தி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.08.2022) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், **வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளைமறுதினம் (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில்** அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

**இலந்தையடி லேன்,**
**உடுவில் மேற்கு,**
**சுன்னாகம்.**

**குடும்பத்தினர்**

(cs20460) (2.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 07 . 1953



மறைவு 24 . 08 . 2022

## திருமதி சிவகுமார் யோகநாயகி

யாழ்ப்பாணம் வசாவிளான் தெற்கை பிறப்பிடமாகவும் கொழும்பு வவுனியாவை வதிவிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுமார் யோகநாயகி நேற்றுமுன்தினம் (24.08.2022) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டாக்டர் கந்தையா பரமேஸ்வரியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம்பிள்ளை சிவபாக்கியத்தின் அன்பு மருமகளும் சிவகுமாரின் அன்பு மனைவியும் கதிர்காமநாயகி (பொறியியலாளர் தென் ஆபிரிக்கா), ஆனந்தகுமார் (பொறியியலாளர் அவுஸ்ரேலியா), சியாமளாநாயகி (இலண்டன்), காலஞ்சென்ற விஜயகுமார் (அபுதாபி), செந்தில்நாயகி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரஜந்தி (சட்டத்தரணி), ஜமுனா (இலண்டன்), கரிஸ்மார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இளங்குமரன் (சட்டத்தரணி), ரமேஷ் (மென்பொருள் பொறியியலாளர் இலண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெயவரினி, சத்யகி, மகிழ், தென்றல் ஆகியோரின் அம்மம்மாவும் காலஞ்சென்ற கனகரத்தினம் (தென் ஆபிரிக்கா), ஜராணி (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற சத்தியானந்தன் (இலண்டன்), ரஞ்சினி (அபுதாபி), விதுரசுந்தரம் (பொறியியலாளர் அவுஸ்ரேலியா), சிவஜோதி, காலஞ்சென்ற சிவகரன், சிவநேசன், சிவனேந்திரன், சிவமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும், சுகந்தி, பராசக்தி, நளினி, அம்பிகாதேவி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (28.08.2022) ஞாயிற்றுக் கிழமை மதியம் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறுகேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

172/8, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
071 843 3217 / 077 534 2207 / 021 221 5636

# பாடசாலை மாணவர்களை ஏற்றாது செல்லும் பேருந்து

### வீதியை மறித்துப் போராடுவோம் என பொதுமக்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 26



முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பகுதியில், பாடசாலை மாணவர்களை பேருந்துகள் ஏற்றாது பயணிக்கின்றன என்றும், இதனால் கூடிய விரைவில் வீதிகளை மறித்துப் போராட வேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்படுவோம் என்றும் அந்தப் பகுதி மக்கள் எச்சரித்துள்ளனர். இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பனிக்கன்குளம், கிழவன் குளம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த மாணவர்களை இந்தப் பகுதியால் செல்லும் பேருந்துகள் ஏற்றாமல் செல்கின்றன. இதனால், சுமார் 10 கிலோ மீற்றருக்கு நடந்துசென்று கல்வியைப் பெற வேண்டிய கட்டாயத்துக்கு எமது மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலருக்கு தெரியப்படுத்தியும் ஊடகங்களில் பல்வேறு தடவைகள் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டும் இதுவரை தீர்க்கப்படாத பிரச்சினையாகவே இந்த விடயம் காணப்படுகிறது. எனவே உரிய அதிகாரிகள் இந்தப் போக்குவரத்துப் பிரச்சினையை சீர் செய்து தரவேண்டும் - என்றனர். (ம)


**தேவை**

அனுபவமுள்ள
களஞ்சிய காப்பாளர் தேவை.

0777 722 215



**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிலையத்திற்கு முன் அனுபவம் உள்ள அல்லது புடைவை வியாபாரத்தில் ஆர்வமுள்ள ஆண்.பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் விற்பனைக்கு ஏற்ற போனஸ் வழங்கப்படும்.
யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. உங்களது சுயவிபரக்கோவையை பின்வரும் Whatsapp க்கு அனுப்பவும்.

077 736 7128


# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் அன்னலச்சிமி சங்கரப்பிள்ளை**

திதி: அமாவாசை (26.08.2022)

தோற்றம் 16.04.1943



மறைவு 25.08.2014

எம் அம்மா எம்மை விட்டு நீங்கி
நீண்டது எட்டு ஆண்டுகள்
எம் நினைவில் வாழ்வீர்கள்
நிறையும் எம் வாழ்நாள் வரை

குடும்பத்தினர்

"மலரகம்"
கொட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(cs.20472) (2.6)


**சிறுநீரகம் தேவை**

0 + குருதி வகையைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவருக்கு சிறுநீரகம் தேவை.

(cs.20467) (2.6)

076 469 5518


# என்றும் நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

**32 ஆவது வருட** | **8 ஆவது வருட**

உதயம் 18.06.1933



அஸ்தமனம் 20.08.1990

உதயம் 02.07.1935



அஸ்தமனம் 27.08.2014

தோலகட்டி, வயாவிளான்
**அமரர் வைத்திலிங்கம் நடராசா**
(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேசசபை, - அச்சுவேலி)
**திதி: 26.08.2022**

தோலகட்டி, வயாவிளான்
**திருமதி சிவபாக்கியம் நடராசா**
**திதி : 28.08.2022**

அன்புடனும், பாசத்துடனும், எம்முடன் வாழ்ந்து நாம் சிறப்புடன் வாழ வழிகாட்டி, எம்மை எல்லாம் விட்டு மறைந்த எங்களின் அன்புத் தெய்வங்கள் அப்பா, அம்மாவே ! ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் எங்களின் இதயங்களில் உங்களின் நீங்காத நினைவலைகளை சுமந்தபடி ஆண்டு தோறும் நல்லூரானின் தீர்த்தக்கரையில் நின்று கொண்டு கண்ணீர் பூக்களினால் உங்களின் பாதங்களுக்கு சமர்ப்பிக்கும் நாங்கள்!

"துஷா இல்லம்"
சாமுவேல்மான், முதலாம் ஒழுங்கை,
உடுவில் மேற்கு, சுன்னாகம். 021 490 9283
இல. 27/5, மெமோறியல் லேன், மானிப்பாய்.
077 995 6974, 021 255 5252 (cs.20474) (2.6)

என்றும் உங்களின் நினைவுகளில்
அன்பு மகன்மார், மகள்மார்,
மருமக்கள் மார், பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 18 . 01 . 1947



மறைவு 20 . 08 . 2022

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தில் எனது சிரேஷ்ட மாணவர் ஆகவும் Pope & Co பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் சிரேஷ்ட பணியாளரும் எனது நண்பரும் எனது நிறுவனத்தின் முன்னாள் பணியாளரான **சி. உஷங்கரின்** பெரிய தந்தையான

## கனகசபை பத்மநாதன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.140, பலாலி வீதி,
திருநெல்வேலி.

M.இராஜநாயகம் அன்கோ
பட்டயக் கணக்காளர்கள்
பணியாளர்கள், இயக்குநர்கள்.

(cs.20468) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடறிந்த தலைவரும்
முன்னாள் எதிர்கட்சித் தலைவருமான

அமரர்
## அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்
அவர்களின்

## 95ஆவது பிறந்தநாள் நினைவு தினம்

காலம் :- 27.08.2022 சனிக்கிழமை மு.ப.09.00 மணி
இடம் :- வலிமேற்கு பிரதேச சபை மண்டபம் - சுழிபுரம்
தலைவர் :- கௌரவ.ஈ.சரவணபவன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்,
தலைவர் உதயன் குழுமம்)

**சிறப்புரைகள்**

**கௌரவ.மாவை சோ.சேனாதிராசா**
(தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி,
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

**கௌரவ சி.சிறிதரன்**
(நாடாளுமன்ற உறுப்பினர்)

**திரு.அ.முருகதாசன்**
(ஆசிரியர்.யா/அராலி சரஸ்வதி வித்தியாலயம்)

**நினைவுப்பேருரை**

**திரு.இ.சர்வேஸ்வரா**
(விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

தலைப்பு :- இலங்கை அரசியல், பொருளாதார நெருக்கடிகளும் தமிழர் கல்வியும்.

# இடர் முகாமைத்துவத்தில் ஊடகங்களது பங்கு பெரியது

### *யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு*

இடர் முகாமைத்துவத்தின் முன்னெச்சரிக்கை தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லும் ஊடகங்களின் பங்கு அளப்பரியது. இவ்வாறு யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார்.

இடர் முகாமைத்துவப் பொறிமுறையின் வினைத்திறனை அதிகரிக்கும் முகமாக ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாணம் ரில்கோ ஹொட்டலில் அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:-

இடர் ஏற்பட முன்னரும் இடர் இடம்பெற்ற பின்னரும் ஊடகங்களின் பங்கும் ஊடகவியலாளர்களின் பங்கும் இன்றியமையாத ஒன்றாகும். - என்றார்.

(எ-14,20)

# உடைமையில் ஹெரோய்ன்; இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஓக.26

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள் ளார்.

புலனாய்வுத் தகவலுக்கு அமைய யாழ்ப்பாணம் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். சந்தேகபர் 25 வயதுடையவர் என்றும், அவரிடம் இருந்து 150 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-125)

# வீட்டுத்தோட்ட செயற்றிட்டத்துக்கு 10 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், ஓக. 26

ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் (யு.என்.டி.பி) 10 லட்சம் ரூபா நிதியொதுக் கீட்டுடன் 56 பெண் பயனாளிகளுக்கான வீட்டுத்தோட்ட செயற்றிட்டம் வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் மகளிர் உறுப்பினர்களால் முன்னெடுக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் 28 வட்டாரங்களிலிருந்தும் வீட்டுத்தோட்ட செய்கை யில் ஆர்வமுள்ள 2 பெண் பயனாளிகள் வீதம் 56 பயனாளிகள், வட்டார உறுப்பினர்கள் மற்றும் வட்டார உத்தியோகத்தர்களால் தெரிவுசெய்யப்பட்டு சபையின் மகளிர் உறுப்பினர்களின் மேற்பார்வையின் அடிப்படையில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது.

செயற்றிட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட 10 லட்சம் ரூபா நிதியில் 3 லட்சம் ரூபா வீட்டுத்தோட்ட உபகரணங்களுக்கும், 2 லட்சம் ரூபா விற்பனை நிலையங்களை அமைத்தல், துண்டுபிரசுரங்க ளுக்கும் மிகுதியான நிதி பயிற்சி மற்றும் இணைச் செயற்றிட்டங்களுக்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

(எ-14,125)

# இடர் முகாமைத்துவம் தொடர்பில் செயலமர்வு



யாழ்ப்பாணம், ஓக. 26

இடர் முகாமைத்துவப் பொறிமுறையின் வினைத்திறனை அதிகரிக்கும்முகமாக ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாணம் ரில்கோ ஹொட்டலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

'இலங்கையின் அனர்த்த அபாய குறிப்பு முறையின் சட்ட ஏற்பாடு', 'யாழ் மாவட்டத்தின் பிரதான இடர்களும் முன்னேற்பாடுகளும்','காலநிலை மாற்றத்துடன் கூடிய அனர்த்தங்கள்', 'அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்த நிலத்தடி நீர் தேக்கமும் வெள்ளக் கட்டுப்பாடும்', 'ஊடகவியலாளர்களின் வகிபாகமும் பொறுப்புக்களும்', ஆகிய தலைப்புக்களில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

செயலமர்வின் வளவாளர்களாக கொழும்பு இடர் முகாமைத்துவ நிலைய கல்வி விழிப்பூட்டல் பணிப்பாளர் சுகத் திஸாநாயக்க, யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராசா, வளிமண்டலவியல் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி டீ.பெர்னாண்டோ, நீர்ப்பாசனத் திணைக்கள எந்திரி சுஜீவன், கொழும்பு இடர் முகாமைத்துவ நிலைய பயிற்சி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜானக்க கண்டுப திராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

வேள்ட்விஷன் நிதி அனுசரணையில் நடைபெற்ற செயலமர்வில் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், யாழ்.மாவட்ட உதவி மாவட்டச்செயலர் ம.பிரதீபன், வேள்ட்விஷன் திட்ட முகாமையாளர் ஏ.ஜி.றொசைறோ, ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-14,159,125,20,27)

# மணிவிழா வாழ்த்துக்கள்



## திரு. சுவாமிநாதன் தவராசா (TS)

(உரிமையாளர் - தவம் ஸ்ரோர்ஸ், துளசி அரிசி ஆலை, ஹரிபோல் விருந்தினர் விடுதி, T.S உணவு உற்பத்திகள், T.S. போக்குவரத்து)

மக்கள் விரும்பும் மணிவிழா நாயகன் தொழிலதிபர்
ஆளுமைக்கு அகவை அறுபது - வாழும்
அகிலத்தை வல்லமையால் வளைத்தார்
நீளுமவர் முயற்சிகள் - பல
சீலம் மிக்க பண்பாளர் அன்பாளர் - பலர்
சீர்பெற உதவிகள் ஆற்றிய அருளாளர்
காலம் கடந்தும் தம்பதியாய் தயா - செல்வி
பெருந்தகைகள் இணைந்து வாழ்க

வாழ்த்துவோர்:
என்றும் அன்புடன்
திருமதி சறோயினிதேவி நல்லநாதன்
திரு.திருமதி செந்தில்நாதன் குடும்பம்
திரு.திருமதி சிவானந்தன் குடும்பம்

சோமராந்தோட்டம்,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

Congratulations!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மன்னாரில் மீண்டும்*

# காற்றாலைத் திட்டத்தை கைவிடுமாறு போராட்டம்

## கனியவள அகழ்வையும் தடுக்குமாறு வலியுறுத்து

**மன்னார், ஓக. 26**

**மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலைத் திட்டம் மற்றும் கனியவள அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பேசாலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டமும் பேரணியும் மக்களால் முன்னெடுக்கப்பட்டது.**



இதன்போது வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு, தனியார் போக்குவரத்து சேவைகள் நிறுத்தப்பட்டு பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:-

மன்னார்த் தீவில் இடம்பெற்று வரும் காற்றாலை நிர்மாணப் பணிகளாலும் கனியவள மணல் அகழ்வாலும் எமது நிலம் பாலைவனமாகவுள்ளது. ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள காற்றாடிகள் எழுப்பும் சத்தத்தால் மக்கள் குடிபெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இன்னும் பல காற்றாடிகளை ஊரின் அருகாமையில் நிறுவ அரசு முயல்கிறது.

எமது குடியிருப்பு நிலம் சுருங்கி பசுமைக் காடுகள் அழிவடையவுள்ளன. கடல் வளம் துடைத்தெறியப்படவுள்ளது. காடுகள் அழிக்கப்படுவதால் மண்ணரிப்பு ஏற்பட்டு எமது தீவு கடலுக்குள் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளது. ஆகவே மன்னாரின் வளங்கள் சூறையாடப்படுவதை உடன் தடுத்துநிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றனர்.

அத்துடன் போராட்டத்தில் கலந்துகொண்டோர் மன்னார் பிரதேச சபை தவிசாளரிடம் மகஜர் கையளிக்கச் சென்ற நிலையில் தவிசாளர் இல்லாமையால் உபதவிசாளரிடம் கையளிக்கப்பட்டது. (ச-60)

# விளங்காமல் எதிர்க்காதீர்!

*காற்றாலை எதிர்ப்புத் தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. கருத்து*

மன்னார், ஓக. 26



மன்னாரில், காற்றாலை மின்னுற்பத்தித் திட்டத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போராட்டம், புரிதலற்ற தன்மையால்தான் மேற்கொள்ளப்படுகின்றது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான மனோ கணேசன்.

இது தொடர்பில் அவர் தனது சமூக வலைத்தளப் பதிவில் மேலும் தெரிவித்ததாவது:-

'சட்ட விரோத மணல் அகழ்வு' என்பது சட்ட விரோதம் என்பதால் அது பிழை. ஆனால் காற்றாலை மின் உற்பத்தி எப்படி, 'கடல் வளம், மீன் வளம்' ஆகியவற்றை அழிக்கும் என எனக்குப் புரியவில்லை. இப்படி விளங்காமல் எதிர்ப்பதை விட, இந்த அபிவிருத்தி திட்டங்களில் மன்னார் மண்ணின் மைந்தர்களுக்கு வரப்போகும் வாய்ப்புகள் என்ன என ஆர்ப்பாட்டம் செய்யும் எதிர்ப்பாளர்களும், மதத்தலைவர்களும் சிந்தித்துப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.

காற்றாலை மின் உற்பத்தி வள வாய்ப்பில் உலகிலேயே இரண்டாம் சிறந்த பிரதேசமாக மன்னாரை ஊடறுத்து செல்லும் கரையோரம் அறியப்பட்டுள்ளது. மன்னாரின் அடுத்த பத்தாண்டுகளின் அபிவிருத்தி இதையொட்டி உள்ளது. இதை சம்பந்தப்பட்டோர் அறிவார்களா எனத் தெரியவில்லை.

இந்தியாவின் அதானி நிறுவனம் இந்தக் காற்றாலைத் திட்டத்தை முன்னெடுக்கிறது என்பதாலும், அதானி இந்திய ஒன்றிய அரசுடன் நெருக்கமானவர் என்பதாலும் சிலருக்குக் காய்ச்சல். அதானி போனால் இன்னொரு மதானி வருவார். அது வேறு விஷயம். ஆனால் அபிவிருத்தியே வேண்டாம் என்றால் எப்படி? - என்றுள்ளது. (ம)

## அலுவலர்களுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.26

சமூக பாதுகாப்பு சபையின் 2021ஆம் ஆண்டுக்கான ஓய்வூதிய திட்டத்தில் பயனாளிகளை உள்ளீர்ப்பு செய்தமைக்கான போட்டியில் தேசிய ரீதியில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. இந்த அடைவு மட்டத்தில் தமது உயரிய பங்களிப்பை நல்கிய அலுவலர்களுக்கான பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் ச. சிவசிறி தலைமையில் நடைபெற்றது. அலுவலகத்தில் கடமையாற்றும் 96 அலுவலர்கள் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (எ-9)

## நல்லூர் ஆலயத்தில் திருட்டு: வெளிமாவட்ட நபர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 26

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வளாகத்துக்குள் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த நபரொருவர், ஆலய வளாகத்தில் கடமையிலிருந்த யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா இடம்பெற்று வரும் வேளையில், ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களிடம் குறித்த நபர் நூதனமாக திருட்டுக்களில் ஈடுபட்டு வந்துள்ளார். இந்த நிலையில் திருடப்பட்ட வங்கி அட்டையைப் பயன்படுத்தி ஆலயத்துக்கு அருகில் உள்ள புடைவை விற்பனை நிலையத்தில் ஆடைகளைக் கொள்வனவு செய்தபோதே குறித்த நபர் இனங்காணப்பட்டார். அதனையடுத்து பொலிஸார் சி.சி.ரி.வி கமராவைப் பார்வையிட்டு குறித்த நபரைக் கைது செய்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-14,20)

## உடைமையில் கஞ்சா; வவு.வில் ஒருவர் கைது

வவுனியா, ஓக. 26



வவுனியா சுந்தரபுரம் பகுதியில் உடைமையில் கேரளக் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரை வவுனியா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த நபரை சோதனைக்கு உட்படுத்திய போது 200 கிராம் கேரளக் கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர்.

அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 30 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-18)

*யாழ்.ரயில் நிலையத்தில்*

## சட்டவிரோதமாக எரிபொருள் கொண்டுசென்றோர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் சட்டவிரோதமான முறையில் பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் இருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

யாழ். புகையிரதத்தில் சட்டவிரோதமாக எரிபொருள் எடுத்து செல்லப்படுவதாக யாழ். பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசேட சோதனை மேற்கொண்டனர். இதன்போது 15 லீற்றர் பெற்றோல், 8 லீற்றர் டீசல் ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

அத்துடன் அதனைக் கொண்டு சென்ற ஏழாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர்கள் இருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர். சந்தேகநபர்களை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## தொடர் திருட்டுக்கள் இருவருக்குச் சிறை!

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ்ப்பாண நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வழிப்பறி, திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவரை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையிலேயே மேற்படி இருவரும் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் 22 மற்றும் 23 வயதுடையவர்கள். இவர்கள் நேற்றுமுன்தினம் திருநெல்வேலி சந்தைக்கு பின்புறமாகவுள்ள பாடசாலை வீதியில் பெண் ஒருவரின் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இருவரும் அண்மையில் யாழ்ப்பாணம் நகரில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டமையும் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களால் திருடப்பட்ட இரண்டு சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றினர். (ச-26,27)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 26

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்க தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து நிர்வாக செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அப்பாத்துரை சோதிலிங்கம்

(ஓய்வுபெற்ற காங்கேசன் சீமேந்து தொழிற்சாலை பொறியியலாளர்)

கீரிமலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை சோதிலிங்கம் நேற்று (25.08.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை, இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி, செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், குகலோசனதேவியின் அன்பு கணவரும், ஜெயசங்கர் (பொறியியலாளர், சிங்கப்பூர்), கிரிஷாந்தி, ரவிசங்கர் (பொறியியலாளர்) ஆகிோயரின் அன்புத் தந்தையும், பஞ்சலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்), செல்வராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை, லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரரும், விசாகரூபனின் (வைத்தியர்) அன்பு மாமனாரும் வினுஜா, நிவேதன், லனுஜா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2022) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நகுலேஸ்வர,வீதி,
கீரிமலை.

தகவல்:
குடும்பத்தினர்.

*அனைவருக்கும்...*

யொட்டி கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழா விசேடமானது. இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் இன, மத பேதங்களைக் கடந்து இலட்சக்கணக்கில் பக்தர்கள் இதன்போது ஒன்றுகூடுகின்றார்கள். வெளிநாடுகளில் இருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் வருகின்றார்கள்.

இந்துக்களோடு சிங்கள பௌத்த மக்களும் ஏனைய சமயத்தவர்களும் தவறாது வழிபட்டு ஆசிபெறும் நல்லூர்க் கந்தனின் சிறப்பானது, இலங்கையின் அனைத்து சமூகங்களுக்கும் இடையிலான உறவு வலுப்பெற உதவுகின்றது.

'இலங்கையின் நெருக்கடிகளை வெற்றிகொள்ள அனைவரும் ஒன்றிணைந்து கடினமாக உழைக்க வேண்டிய தருணம் இது. நாட்டு மக்கள் அனுபவித்துவரும் துன்பங்கள் விலகி, சுபீட்சமான வாழ்வு அனைவருக்கும் ஏற்பட வேண்டும். இலங்கையில் சித்தர்கள் வாழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பூமியில் எழுந்தருளியிருக்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நடந்துவரும் இந்தத்தருணத்தில், நாடு எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடியான சூழலை வெற்றிகொண்டு, அனைவருக்கும் நலம் நல்க நல்லூர்க் கந்தனை அனைவரும் ஒன்றுகூடிப் பிரார்த்திப்போம்' என்று ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-22)

# ரணிலுடைய அரசாங்கத்திலும் காணி சுவீகரிப்பு தொடர்கதை

## வினோ எம்.பி. ஆதங்கம்

முல்லைத்தீவு -வட்டுவாகல் கோத்தாபய கடற்படை முகாமுக்கு, காணி சுவீகரிப்பதற்காக தொடர்ந்தும் நில அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கோத்தாபய அரசாங்கத்தைத் தொடர்ந்து ரணில் அரசாங்கத்திலும் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது -என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான வினோநோகராதலிங்கம்.

கோத்தாபய முகாமுக்குக் காணி சுவீகரிப்பதற்காக அண்மையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோத்தாபய கடற்படை முகாம் அகற்றப்பட வேண்டும் என்றும் காணி சுவீகரிப்பு நிறுத்தப்பட வேண்டும் என்றும் மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர். சிலர் கோத்தாபய கடற்படை முகாமுக்குக் காணி வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்தனர். அவர்களும் அரச அச்சுறுத்தலுக்குப் பயந்தே காணிகளை அரசாங்கத்துக்கு வழங்க விருப்பம் தெரிவித்தனர். அரசாங்கம் பொருளாதார சுமையினை மக்கள் மீது திணித்துவிட்டு, மக்களின் ஏழ்மையினை பயன்படுத்தி அவர்களின் காணிகளைப் பறிமுதல் செய்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்தக் காணி அபகரிப்புகள் நிறுத்தப்பட வேண்டும். கடைசியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்தபோது இந்தக் காணி அபகரிப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும், காணி அளவீடுகள் செய்வதையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரியிருந்தோம் இவ்வாறு கோரி சில நாள்களிலேயே கோத்தாபய கடற்படை முகாமுக்கு காணி சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை கடுமையாகக் கண்டிக்கத்தக்கது -என்றார். (ம-19)

# மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 01 . 1947



மறைவு
25 . 08 . 2022

## சின்னத்துரை சண்முகலிங்கம் (சோதிடர்)

(அமரர் அளவெட்டி விநாசித்தம்பியின் மாணவர்)

தாவடி தெற்கு கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சண்முகலிங்கம் அவர்கள் நேற்று (25.08.2022) வியாழக்கிழமை 2.00 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை சரஸ்வதியின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு துரையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் செல்வசோதியின் அன்புக் கணவரும் சோதிலிங்கம், (கணக்காளர், கல்வித் திணைக்களம் - ஓய்வுநிலை), நீலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், வசுந்துல தேவி, சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனரும், நடராசாபிள்ளையின் அன்பு மருமகனும், மாலினி, ரேவதி, சிவரூபன், சிவரூபி, சிறிமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சூரியகாந்தகுமார், தயாபரன், கௌசிகா, ரமேஸ்குமார், ரதிகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கன்சிகா, சஞ்ஜித், சஞ்சய், அனுஷ், அபிசா, அஸ்விகா, ஆருஜன், சந்தோஷ், அஸ்வின், ஆகாஷ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2022) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் ந.ப 12.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

ரூபன் (மகன்) - 077 04[illegible]
மனைவி - 077 934 7749

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
12 - 01 - 1950



இறப்பு
25 - 08 - 2022

## திரு.சின்னத்தம்பி சுந்தரலிங்கம்

புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் ஊரதீவை பிறப்பிடமாகவும், திருநெல்வேலி தற்பொழுது பொக்கனை வீதி, ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (25.08.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், குணரத்தினம் மரகதம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஸ்ரீகுணபூசணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அரியபுத்திரன், சின்னராசா மற்றும் பங்கையற்செல்வி, முத்துலிங்கம், சந்திராதேவி, நவரெட்ணம் (பிரான்ஸ்), நாகலெட்சுமி (ஜேர்மன்), சண்முகலிங்கம் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தர்மபூபதி, காலஞ்சென்ற தேவராசா, கல்யாணி, சுந்தரலிங்கம், மங்களேஸ்வரி, கிருபநாதன், தர்சினி, பகீரதன் மற்றும் Dr.பேரின்பநாதன், வயித்திலிங்கம் (கண்ணன் லொட்ஜ்), குபேரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், பர்மிளா, ஜியாமளா (கனடா), சதீஸ், துசாயினி (தொழிநுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி திணைக்களம் முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்வானந்தன், வதீஸ்கரன் (கனடா), சோபிநாத் (AS Studio), தயாநிதி ஆகியோரின் மாமனாரும், லாவணியன், கம்சிகா, தன்சிகா, பபிசன், சாங்கீதன், யஸ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] - +14372386050
பர்மிளா - 077 905 7937
துசாயினி - 077 618 2333

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 20485) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுநரின் செயலராக வாகீசன் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 26

வடமாகாண ஆளுநரின் பதில் செயலராக பொன்னம்பலம் வாகீசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர ஆணையாளராகவும் பின்னர் வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவும், வடமாகாண பதில் பிரதம செயலர் மற்றும் மனித வள பிரிவில் பணியாற்றிய நிலையில் தற்போது அவர் ஆளுநரின் பதில் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(அ-ஒ-இ)

### இனிமேல்...

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துக்கு ஜனாதிபதி வர்ண விருது மற்றும் பல்கலைக்கழக வர்ண விருது வழங்கும் நிகழ்வில் நேற்றுப் பிற்பகல் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு பாதுகாப்பு பல்கலைக்கழகமாக உங்கள் திறமை வெளிக்காட்டப்பட்டுள்ளது. பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலத்தில் போராடிய பல அதிகாரிகள் இந்தப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள். எனவே இந்தப் பல்கலைக்கழகத்தை நாம் பாதுகாக்க வேண்டும். மேலும், திறமையான அதிகாரிகளை நமது இராணுவத்தில் சேர்க்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை. ஒரு இராணுவத்தை வழிநடத்த வேண்டுமானால், அது இராணுவத்தின் தலைமை மிகச்சிறப்பானதாக் இருக்க வேண்டும். மேலும் அந்த இராணுவத்துக்கு ஒழுக்கம் தேவை. ஒழுக்கம் இல்லாமல் இராணுவம் முன்னேற முடியாது. ஒரு இராணுவம் ஒழுக்கத்துடன் மட்டுமே முன்னேறமுடியும். மேலும் இராணுவத்தை ஒழுக்கத்தால் மட்டும் வழிநடத்த முடியாது. ஒழுக்கத்துடன் பயிற்சியும் தேவை. ஒரு இராணுவம் ஒழுக்கமும் பயிற்சியும் பெற்றாலும் வெற்றியடைய முடியாது. அந்த இராணுவத்துக்கு அறிவு இருக்கவேண்டும். இராணுவ அறிவு மற்றும் பிரதேச அறிவு இருக்க வேண்டும். அந்த அறிவுடன் வெற்றி கிடைக்கும். இங்குள்ள தலைவர்களுக்கு ஒழுக்கம், பயிற்சி மற்றும் அறிவு கொடுக்கப்படுகிறது. அங்கிருந்து, இராணுவம் அனைத்துப் பிரிவுகளுக்கும் தலைமைத்துவத்தை வழங்குகிறது. சிலர் இராணுவத் தளபதிகளாக மாறுகிறார்கள். மற்றவர்கள் இந்தப் பட்டத்துடன் பல்வேறு துறைகளில் சென்று சேவை செய்கிறார்கள் - என்றார்.

(அ-ஒ-இ)

### டொலரை...

இலங்கைக்கு அனுப்புவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள வங்கி அமைப்பின் மூலம் தமது பெயரில் உள்ள வெளிநாட்டு நாணயக் கணக்குக்கு அவர்கள் பணத்தை அனுப்ப வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாடு செல்லும் ஊழியர்களில் முதல் மட்ட அதிகாரிகள், 100 அமெரிக்க டொலரும், இரண்டாம் நிலை அதிகாரிகளுக்கு 200 அமெரிக்க டொலரும் அனுப்ப வேண்டும். மூன்றாம் நிலை அதிகாரிகள் 300 அமெரிக்க டொலரும், உயர் மட்ட அதிகாரிகள் 500 அமெரிக்க டொலரும் இலங்கைக்கு அனுப்புவது கட்டாயமாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஒ-இ)

### திருடர்கள்...

பட்டுள்ளன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒரு சிறுவன் மற்றும் 4 பெண்கள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளின் பின்னர் நல்லூர்க் கந்தனின் தேர்ப்பவனி நேற்று இடம்பெற்றது. இதனால் அதிகளவான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர். சன நெரிசலை சாதகமாக்கிய திருடர்கள் தங்கள் கைங்கரியத்தைக் காட்டினர். 2 தாலிக் கொடி மற்றும் சங்கிலிகள் உட்பட 30 பவுண் நகைகள் களவாடப்பட்டதாக நல்லூர் உற்சவகால பொலிஸ் காவலரணில் 7 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் ஒருவர் சங்கிலி அறுக்க முற்பட்டபோது கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நீர்கொழும்பைச் சேர்ந்த மேலும் 3 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் பொலிஸாரின் விசேட தேடுதல் நடவடிக்கையின்போது கோப்பாயைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவனும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளான்.

(அ-ஒ-5-125)

### 'அரோகரா'...

காலை 6 மணியளவில் ஆரம்பமான விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து ஆறுமுகப்பெருமான், வள்ளி - தெய்வானை சமேதரராக காலை 7.20 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

தொடர்ந்து வள்ளி - தெய்வானை சமேதரராக தேரில் வெளிவீதி உலா வந்த ஆறுமுகப் பெருமான் காலை 8.15 மணிக்கு தேர் இருப்பிடத்தை வந்தடைந்தார். பச்சைசாத்தி காலை 9.50 மணிக்கு மீண்டும் ஆலயத்தினுள் ஆறுமுகபெருமான் சென்றார்.

தேர்த்திருவிழாவின் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டிருந்தனர். அதேவேளை ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப் பிரதட்சிணம் செய்தும், நூற்றுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூரச் சட்டிகள் ஏந்தியும் முருகப்பெருமானை வழிபட்டனர்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. மாலை 5 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-5)

### குழந்தைகளைப்...

ஒருவர் மற்றும் அவர்களை வேலைக்கு அமர்த்திய விடுதி உரிமையாளர் என ஐவர் நீதிமன்றால் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

கைக்குழந்தை உள்ளிட்ட 7 சிறுவர்களை சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் கண்காணிப்பில் வைக்க உத்தரவிட்ட யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, அவர்களை சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் இன்று பாரப்படுத்துவதற்காக மன்றில் முற்படுத்த கட்டளையிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர், ஐந்து சந்திப் பகுதியிலுள்ள விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள பெண்கள், சிறுவர்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டு ஊதுபத்தி வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று பல முறைப்பாடுகள் வழங்கப்பட்டபோதும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்த விடயம் வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜயசூரியவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவரது உத்தரவில் நேற்றையதினம் 3 பெண்கள், ஆண் ஒருவர் மற்றும் விடுதி உரிமையாளர் என ஐவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களின் பாதுகாப்பிலிருந்த கைக்குழந்தை உட்பட 8 வயதுக்குட்பட்ட 7 சிறுவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் எடுக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்திய குற்றச்சாட்டில் விடுதி உரிமையாளர், 3 பெண்கள் மற்றும் ஆண் ஒருவரையும் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

கைக்குழந்தையை தாயாருடன் இருக்க அனுமதித்த மன்று, சிறுவர்களை சிறைச்சாலை அத்தியட்சகரின் கண்காணிப்பில் வைக்க உத்தரவிட்டது.

(அ-ஒ-26)

### இன்னும்...

உதயங்க வீரதுங்க நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

'இலங்கை வரும் கோத்தாபய ராஜபக்சவை மீண்டும் அரசியலுக்குள் கொண்டுவர சிலர் முயற்சிக்கின்றனர். தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக்கி, பிரதமர் கதிரையை வழங்கவும் முயற்சி எடுக்கப்படுகின்றது. இதனை மக்கள் ஏற்கப்போவதில்லை' என்றும் உதயங்க வீரதுங்க மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை - கோத்தாபய இந்த மாதம் 24ஆம் திகதி நாட்டுக்கு வருவார் என்று முன்னதாக உதயங்க தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-5-22)

### டீசல்...

டுள்ளதாக இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

'உரிய கையிருப்பு இன்மையே இதற்கான காரணம்' என இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் இணை செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்து சபையின் பேருந்து சாலைகளுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. உரிய அறிவிப்பு இன்மையால் தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அதேநேரம், கொலன்னாவ முனையத்தில் இருந்தும் எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச்செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

(அ-ஒ-இ)

### 4 மில்லியன்...

மதியான அத்தியாவசிய மருத்துவப் பொருள்கள் வழங்கப்படும் என்று உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் டெட்ரோஸ் அதானம் கெப்ரேயஸஸ் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றமைக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வழங்கப்படும் அத்தியாவசிய மருத்துவப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், விநியோகிப்பதற்கான திகதிகள் மற்றும் பெயர்கள் பற்றிய விவரம் உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகத்தால் அறிவிக்கப்படும் எனவும் இந்த செய்தியில் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

கொரோனாப் பரவலால் இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார அழுத்தத்தை உலக சுகாதார அமைப்பு ஏற்றுக்கொள்வதாகவும், சர்வதேச சந்தையில் உணவு மற்றும் எண்ணெய் விலை உயர்வு, பாதிக்கப்படக்கூடிய சமூகத்துக்கு பெரும் சவாலாக இருப்பதாகவும், அந்தச் சவாலான காலகட்டத்தில் இலங்கைக்கு உதவிகளை வழங்க உலக சுகாதார அமைப்பு தயாராகவுள்ளதாகவும் கெப்ரேயஸஸ் தெரிவித்துள்ளார்.

(அ-ஒ-இ)

### மன்னிப்புக்...

துறையை இழிவுபடுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்தமைக்கு மன்னிப்புக் கோரி நீதிமன்றத்துக்குச் சத்தியக் கடதாசி ஒன்றை நேற்றுச் சமர்ப்பித்துள்ளார்.

இதனையடுத்து அவர் இன்று அல்லது எதிர்வரும் திங்கட்கிழமை விடுவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அலரிமாளிகைக்கு வெளியே நீதித்துறையை அவமதிக்கும் வகையில் ரஞ்சன் ராமநாயக்க கருத்துத் தெரிவித்திருந்தார். அவரது கருத்து, நாட்டின் நீதித்துறை மீதான நம்பிக்கையைச் சீர்குலைத்துவிட்டது எனத் தெரிவித்து, சிங்கள ராவய அமைப்பின் செயலர் மாகல்கந்தே சுதத்த தேரர் மற்றும் விமானப்படையின் ஓய்வுபெற்ற அதிகாரி ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதனை ஆராய்ந்த உயர் நீதிமன்றம், 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதியன்று நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இதுவரை, ரா்மநாயக்கவின் தண்டனைக் காலம் ஒரு வருடமும் 7 மாதங்களும் நிறைவடைந்துள்ளது.

அலரிமாளிகைக்கு வெளியில் தாம் கூறிய கருத்து முற்றிலும் பொய்யானது, இழிவானது மட்டுமன்றி ஒட்டுமொத்த நீதித்துறையையும் அவமதிக்கும் வகையிலானது என்பதை ஒப்புக்கொண்டுள்ள அவர், அது தொடர்பில் முழு நீதித்துறையிடமும் மன்னிப்புக் கோருவதாகவும் தனது சத்தியக் கடதாசியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 2017 ஆம் ஆண்டு தாம் வெளியிட்ட கருத்தை மீளப்பெறப்போவதில்லை எனக் கூறி, உயர் நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே கூறிய கருத்துக்கும் அவர் மன்னிப்புக் கோரியுள்ளார்.

அத்துடன், தனது வாழ்நாளில், ஒட்டுமொத்த நீதித்துறையை விமர்சிக்கும் வகையில் அல்லது இழிவுபடுத்தும் வகையில் எந்தவொரு கருத்தையும் வெளியிடப் போவதில்லை என்றும் அவர் அந்தச் சத்தியக்கடதாசியில் உறுதியளித்துள்ளார்.

(அ-ஒ-5-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன். புதைகுழி எச்சங்கள் கார்பன் பரிசோதனைக்கு

## நீதிவான் முன்னிலையில் பிரித்து அனுப்புமாறு கட்டளையிடப்பட்டது

கொழும்பு, ஓக.26

**மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எலும்பு எச்சங்களை மன்னார் நீதிவான் முன்னிலையிலேயே பிரித்தெடுத்து, காபன் பரிசோதனை நிறுவனத்துக்கு பரிசோதனைக்கு அனுப்பவதற்கான மாதிரி களை தெரிந்தெடுத்து அனுப்பவேண்டும் என்று கட்டளையாக்கப்பட்டுள்ளது.**

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி வழக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் நீதிவான் நீதி மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட் டது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட மனித எலும்பு எச்சங்கள் பல காலங் களாக அநுராதபுரம் மருத்துவமனை யில் பாதுகாப்புக்காக வைக்கப்பட் டுள்ள நிலையில் மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் கட்டளைக்கு அமைவாக அமெரிக்காவிலுள்ள புரோகாட் என்னும் ஒரு நிறுவனத்தில் பரிசோதனைக்காக அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வழக்குத்தொடுநர் சார்பாக கேட்கப்பட் டிருந்தது.

அதற்காக அநுராதபுரத்தில் மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ள மனித எலும்பு எச்சங்களைப் பிரித்தெடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பவேண்டும் என்று கடந்த தவணையின்போது வழக்குத் தொடுநர் மன்றில் கோரிக்கை ஒன்றை வைத்திருந்தார்.

அத்துடன் அநுராதபுரம் நீதிவான் நீதி மன்ற நீதிபதிக்கு முன்பாக மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி அதற்கு உறுதுணை புரிந்து அதற்கான ஏற்பா டுகளை மேற்கொள்ளும்படி கட்டளை வழங்க வேண்டும் என்றும் மன்றில் கோரப்பட்டிருந்தது.

இதற்கமைய நேற்றுமுன்தினம் மன் றில் கட்டளை வாசிக்கப்பட்டது. மனித எலும்பு எச்சங்களை மன்னார் நீதி வான் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தி மன் னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னி லையிலேயே பிரித்தெடுக்கப்பட வேண் டும் எனக் கட்டளையிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் மன் றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பாதிப்படைந்தவர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வீ.எஸ். நிரஞ் சன் மற்றும் திருமதி றனித்தா ஞான ராஜ் ஆகியோரும், காணாமல் போனோர் அலுவலகம் சார்பில் திரு மதி பி.புராதினியும் மன்றில் முன்னி லையாகியிருந்தனர்.

எதிர்த்தரப்பில் அரச சட்டத்தரணி மற் றும் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் முன்னிலையாகி இருந்தனர். இந்த வழக்கானது எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (எ-60)



# சங்கரத்தையில் மிதிவெடிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 26

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட சங்கரத்தைப் பகுதியில் மிதி வெடிகள் நேற்று மீட்கப்பட்டன என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

சங்கரத்தை பகுதியில் உள்ள வீடொன் றின் காணியை வீட்டின் உரிமை யாளர் நேற்றுக்காலை துப்புரவு செய் துள்ளார். அதன்போது சந்தேகத்துக் கிடமான முறையில் இரு பொருள்கள் காணப்பட்டதை அவதானித்தார்.


அதன்பின்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை யடுத்து. குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட பொருள்களை அவதா னித்து மிதிவெடிகள் என்பதை இனங் கண்டனர். அதன்பின்னர் மிதிவெடி களை செயலிழக்கச் செய்வதற்கான நட வடிக்கைகளை வட்டுக்கோட்டைப் பொலி ஸார் முன்னெடுத்தனர். (ம-14,125)

# கலைஞர்களின் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஓக. 26

தேசிய கலை இலக்கியப் பேர வையின் ஏற்பாட்டில் 'கலை இலக்கிய ஆளுமைகளை நினைவுகூரல்' என்ற தலைப் பில் ஓவியர் ஆசை இராசையா வின் 2ஆவது ஆண்டு நினை வுதினமும் எழுத்தாளர் மாவை வரோதயனின் 12ஆவது ஆண்டு நினைவுதினமும் நாளைமறுதி னம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் நினைவுரைகளை 'இலங்கைக் காண்பியக் கலை வரலாற்றில் ஓவியர் ஆசை இராசையா' என்ற தலைப்பில் யாழ். தேசிய கல்வியியற் கல் லூரியின் விரிவுரையாளர் சுதர் சினி விக்னமோகனும் 'மாவை வரோதயனின் மக்கள் நேயம்' என்ற தலைப்பில் பொதுவுடமை அரசியல் சமூக செயற்பாட்டா ளர் தோழர் சி.கா.செந்திவேலும் ஆற்றவுள்ளனர். (ம-14)



# ஹரிகர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 26

சுழிபுரம் மேற்கு ஹரிகர புத்திர ஐயனார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்று முற்பகல் 10:30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பத்து தினங்கள் நடைபெறவுள்ள திரு விழாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திரு விழாவும் 3ஆம் திகதி சனிக்கிழமை வர லாற்றுச் சிறப்புமிக்க திருவடி நிலை தீர்த் தக் கரையில் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-14,125)


வைரவிழா வாழ்த்துக்கள்



தொழிலதிபர் சுவாமிநாதன் தவராஜா
(நிறைவேற்றுப்பணிப்பாளர் - ஹரிபோல் சதுக்கம்)

எங்கள் அதிபரிற்கு வைரவிழா வாழ்த்துக்கள்!
இன்று உங்கள் நாள் !
அறுபது ஆண்டுகளில் நீங்கள் பெற்ற வளர்ச்சிகள் பல,
அவற்றில் நாமும் உங்களோடு இருப்பது எமக்கு பெருமையே.
நாம் அனைவரும் இணைந்து வேலை செய்வதால்
மட்டும் வேலை நடந்துவிடுவதில்லை,
உங்கள் உத்வேகமே எங்களை இயக்குகின்றது.
நீங்கள் ஒரு அற்புதமான தொழிலதிபர்.
கோபப்படும் சந்தர்பங்கள் நியாயமானவை,
ஆனால் அவை கூட சிறுநொடியில் மாறிவிடும்.
உங்கள் உழைப்பு உங்களை முன்னேற்றிக்கொண்டே செல்லும்.
தொடருங்கள் நாங்களும் என்றும் உங்களை தொடர்வோம்.
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் ஐயா !

Hari Bol Square

என்றும் உங்களுடன்,
ஹரிபோல் குழுமத்தினர்.
ஹரிபோல் சதுக்கம் -
மருதனார்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0766667484, 0213212863.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.